# அரசியல்

பகுதி I

ஆக்கம்

S.S திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜனநாயகம் | 2 - 11 |
| 2. | இறைமை | 12 - 16 |
| 3. | அதிகார வேறாக்கல் | 17 - 25 |
| | கடந்த கால வினாக்கள் | |
| | உசாத்துணை நூல்கள் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம்
## (Democracy)

நாம் இப்பொழுது ஜனநாயக உலகில் வாழ்கின்றோம். எனவே நாம் ஜனநாயகம் பற்றி அறிந்திருத்தல் அவசியமான ஒன்றாகும். ஜனநாயகம் என்பது Democracy என்ற ஆங்கில சொல்லின் தமிழ் வடிவமாகும். இச்சொல்லானது கிரேக்க சொல்லான Demokratia என்ற சொல்லின் மறு வடிவமே ஆகும். Demo – (People) – மக்கள் எனவும் Cracy (Power) அதிகாரம் அல்லது வலு எனவும் பொருள் விளக்கம் தருகின்றது. எனவே ஜனநாயகம் என்பது மக்களின்ஆட்சிஅல்லதுமக்களின் வலு எனப் பொருள்படும்.

ஜனநாயகம் என்றால் என்ன என்பது பற்றி அரசியல் அறிஞர்கள் மத்தியிலே பல்வேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றை பொதுவாக நோக்கில்

01. ஓர்ஆட்சிமுறைஅல்லது அரசாங்க வகையினுள் ஒன்றாகும்.
02. சமூக விழுமியங்களின் வெளிப்பாட்டு வடிவம்

முதலாவது கருத்தினை விளக்குவதற்கு பின்வரும் அரசியல் அறிஞர்களுடைய கருத்துக்கள் ஏற்புடையதாகவிருக்கும்

**1799 தோமஸ் கூப்பர் (Thomas Cooper)**

"மக்களுடைய மக்களுக்கான அரசாங்கம்"

**1850 தியோடர் பாக்கர் (Theodar Parker)**

"எல்லா மக்களுடையதும், எல்லா மக்களினதும் எல்லா மக்களுக்குமான ஒரு அரசாங்கம்"

**1863 ஆபிரகாம் லிங்கன் (Abiragam Lingan)**

"மக்களினால் மக்களுக்காக நடாத்தப்படும் மக்களின் அரசு"

**1940வின்சன் சேர்ச்சில் (Winson Circhel)**

"குறைந்தளவு தீங்குகளைக் கொண்ட ஆட்சி"

இவர்களின் கருத்தின் பிரகாரம் மக்கள் தமது ஆளும் அதிகாரத்தை நேரடியாகவோ அல்லது தம்மால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் மூலமோ பிரயோகிக்கக் கூடிய அரசாங்கமுறை என ஜனநாயகத்தை வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கருத்தானது மக்கள் தமது உரிமைகளை பயன்படுத்தி வாழ்வில் சிறப்பையும் பூரணத்துவதையும் அடையும் ஓர் சமூகத்தை ஜனநாயகம் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. சுருக்கமாக நோக்கின் ஒரு அரசு தனது அடிப்படை சமூக போக்குகளிலும், கொள்கைகளிலும் மக்கள் விருப்பத்தினை வெளிப்படுத்தக்கூடிய நிறுவனங்களைக் கொண்டிருக்குமாயின் அவ்வரசு ஜனநாயக அரசு என வரையறுத்துக் கொள்ள முடியும். ஜனநாயகம் இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றது.

01. நேரடி ஜனநாயகம்

02. மறைமுக ஜனநாயகம் (பிரதிநிதித்துவ ஜனநாயகம்)

ஆரம்பகால கிரேக்க நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் சிறப்பாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது. எந்த ஒரு விடயத்தை தீர்மானிக்கும் போதும் நேரடியாகவே வெளிப்படுத்துவதன் மூலம் சட்டங்களை ஆக்கி வந்தனர் இங்கு மக்கள் நேரடியாக பங்கு கொள்வதால் அரசின் விருப்பம் என்பது மக்களின் விருப்பமாக இருந்ததுடன் மக்களே உண்மையான ஆட்சியாளன் என்ற கருத்தை வெளிப்படுத்தியது. நவீன அரசியல் முறையில் நேரடி ஜனநாயகம் சாத்தியமற்றதாகக் காணப்படுகின்ற போதும் அதன் பண்புகள், மக்கள் தீர்ப்பு, திருப்பி அழைத்தல், தொடக்க உரிமை ஒப்பம் கோரல் என்னும் முறைகள் ஊடாக நேரடி ஜனநாயகம் பிரதிபலிக்கப்படுகின்றது

இன்று ஜனநாயகம் என்று கூறப்படுகின்ற எல்லா நாடுகளிலுமே பிரதிநிதித்துவ ஜனநாயகமே பின்பற்றப்படுகின்றது. இதன் ஆரம்பம் பிரித்தானியா ஆகும். இது தாராண்மைவாத ஜனநாயகம் எனவும் அழைக்கப்படுகின்றது. பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது மக்கள் அரசியல் தீர்மானங்களில் தாமே நேரடியாக பங்குபற்றாமல் தமது சார்பாக முடிவுகளை மேற்கொள்வதற்காக பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறை எனக் கூறலாம். தற்கால அரசுகள் பெரியனவாகவும் அதிகமக்கள் தொகை உடையனவாகவும் இருக்கின்ற காரணத்தினால் மக்கள் யாவரும் அரசியல் செயன்முறையில் நேரடியாகப் பங்குபற்ற இயலாமையினால் இம்முறை பின்பற்றப்படுகின்றது. ஜனநாயக நாடுகள் அனைத்திலும் பிரதிநிதித்துவ ஜனநாயகம் பின்பற்றப்படுகின்ற போதும் அவற்றின் அரசாங்கம் ஜனாதிபதி அரசாங்கம் பாராளுமன்ற அரசாங்கம் எனவாறு பல வடிவங்களில் காணப்படுகின்றது. அந்த வகையில் நவீன ஜனநாயகத்தின் பண்புகளாக பின்வருவன கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 01. காலம் பிந்தாததுமான சுதந்திரமான தேர்தல்

ஓர் ஜனநாயக அரசாங்கமானது அதன் அதிகாரத்தினை ஆளப்படுவோரின் முறையான சம்மதத்துடன் பெற்றுக் கொள்கின்றது. இதன்வழி மக்கள் தாம் விரும்பும் ஆட்சியாளனை தேர்ந்தெடுக்கும் வழியினை அகலமாகத் திறந்து விட்டுள்ளது. ஆளப்படுவோர் 5/6 வருடங்களுக்கு ஒரு முறை தமக்கு விருப்பமற்ற ஓர் அரசாங்கத்தினை அதிகாரத்திலிருந்து விலக்கி விருப்பமான அரசாங்கத்திடம் ஆட்சியை கையளிக்க வேண்டும். சுதந்திரமான நடுநிலையான மற்றும் ஜனநாயக ரீதியாக இந்த அரசியல் மாற்றம் இடம் பெறுவதால் போராட்டம் புரட்சி போன்றவை தடுக்கப்பட வழி வகுக்கின்றது.

### 02. சட்டவாட்சி (Rule of Low)

ஜனநாயக ஆட்சியிலே சகல பிரஜைகளும் சட்டத்தின் முன் சமனானவர்கள் அல்லது சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பை சமமாகப் பெறுவர். இது சட்டத்திற்கு மேற்பட்டவராக எவரையும் கருதாது சட்டத்தின்படி எல்லோருக்கும் அதாவது ஆளுவோர், ஆளப்படுவோர் சமனாக நடத்தப்பட்டு ஆட்சி புரிவதை உணர்த்துகின்றது. இது பக்க சார்பான அதிகாரமின்மையை குறிப்பிடுகின்றது என்பதுடன் அரசாங்கத்தின் சகல செயல்களும் சட்டப்படி அமைய வேண்டும் என்பதை குறிப்பதோடு சட்டத்தின் முன் சமத்துவத்தையும் எடுத்தியம்புகின்றது.

### 03. உரிமைகள் சுதந்திரம் நிலவுதல்

ஜனநாயக சமூகமொன்றில் மக்கள் இயல்பான உரிமைகளை சுதந்திரங்களைப் பெற்றிருப்பர். அவை மாற்ற முடியாதவை அதனாலேயே ஜனநாயக அரசாங்கங்கள் அவற்றைப் பாதுகாக்கின்றன. இவ்வாறான உரிமைகளே பிரஜைகள் தமது ஆளுமையினை பூரணப்படுத்தவும் அவசியமான நிபந்தனையாக உள்ளது. திறமையும் உழைப்பும் நேர்மையும் உள்ள பிரஜை ஒருவர் சாதாரண பிரஜை என்ற அந்தஸ்தில் இருந்து நாட்டின் தலைவராக உயரக்கூடிய வாய்ப்பினை ஜனநாயகம் வழங்குகின்றது. இவை இன்றி மக்கள் அரசியல் அதிகாரத்தில் பங்கு கொள்ள முடியாது அரசாங்கம் பக்க சார்புடையதாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. ஆட்சியில் மக்கள் பங்குபற்றுதல்

ஜனநாயகத்தில் மற்றுமோர் அம்சமாக கருதப்படுவது மக்கள் அரசியலில் பங்குபற்றும் தன்மையாகும். உண்மையான ஜனநாயக ஆட்சியில் மக்களின் பங்குபற்றுதல் என்பது மூன்று சந்தாப்பங்களில் நிகழ்கின்றது.

01. தீர்மானம் எடுப்பதில்
02. எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தல்
03. தீர்மானத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற நன்மை தீமைகளில் பங்குபற்றுதல்

ஜனநாயகத்தில் மக்கள் எவ்போதும் விழிப்புணர்வு கொண்டவர்களாகவும் தமது வாக்குரிமையை பயன்படுத்தும் சந்தாப்பங்களை அதிகளவில் பெற்றவர்களாகவும் ஊடகங்கள் மூலம் அரசியல் அறிவை போதுமான அளவு பெற்றுள்ளோராக இருப்பர். கிராமிய நகர, மாவட்ட தேசிய மட்டத்தில் மக்கள் நிறுவன ரீதியாக இயங்குவதனால் அதன் மூலம் மக்கள் அரசியல் அறிவையும், அது பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுக் கொண்டவராக மாற்றுவதற்கு பெரும்துணையாக உள்ளது.

## 05. சுதந்திரமான ஊடகத்துறை

உண்மையான ஒரு ஜனநாயகத்திற்கு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி பரப்பும் சாதனங்களாகிய பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிற்கு சுதந்திரம் வழங்குகின்றது. இவை அரசு, தனியார் சாராது நடுநிலைமையாக செய்திகளை உடனுக்குடன் திரிவுபடுத்தாமல் மக்கள் மத்தியில் தெளிவாக தெரியப்படுத்துகின்றது. ஜனநாயகத்தில் சுதந்திரமாக ஆட்சியாளனை விமர்சனம் செய்யவும் மக்கள் தேர்தலில் வெளிப்படுத்தும் பொதுசன அபிப்பிராயங்களில் சுமூகமான முறையில் ஆட்சியாளர்களை மாற்றங்கள் ஏற்படுத்த முடியும்.

## 06. அரசியற் கட்சிகள், அழுக்கக்குழுக்கள்.

ஜனநாயகத்தின் இயக்கத்திற்கு அரசியற்கட்சி, அழுக்கக்குழு என்பன அத்தியாவசியமான ஒன்றாகும். தற்கால ஜனநாயகம் பிரதிநிதித்துவ ஜனநாயகமாகச் செயற்படுவதனால் மக்கள் அபிப்பிராயங்களை வழங்குவதிலும் கொள்கைகளை முன்வைத்து மக்கள் தமது பிரதிநிதிகளை தோந்தெடுப்பதில் கட்சி பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. தற்கால ஜனநாயகத்தில் அதன் சில தீமைகள் காரணமாக அழுக்கக்குழுக்கள் மக்களுக்கு மிகக்கூடிய நன்மைகளை அளிக்கின்றதால் ஜனநாயகத்தால் அழுக்கக் குழு முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மக்கள் இறைமை

இறைமை என்னும் கோட்பாடு ஜனநாயகத்தின் சாரமாக கருதப்படுகின்றது. இந்த எண்ணக்கருவானது அரசியல் அதிகாரத்தினை மக்கள் மீது சுமத்துகின்றது. சகல ஜனநாயக நாடுகளிலும் மக்களே அதிகாரத்தின் மூலமாகவும் ஆட்சியின் பாதுகாவலனாகவும் விளங்குவர். இம்மக்கள் இறைமையின் வழி அரசாங்கம் மக்களின் நன்மைக்காகவே அன்றி அதன் நன்மைக்காகவன்று என்ற கருத்து அழுத்திக் கூறுகின்றது.

08. அரசியல் திட்ட அரசாங்கம்

நவீன அரசுகள் குறிப்பாக தாராண்மைவாத ஜனநாயக கோட்பாட்டினை பின்பற்றுகின்ற அரசுகள் அரசியல் அரசியல் யாப்பிற்கு முக்கிய இடத்தினை வழங்குகின்றது. இங்கு அரசின் அனைத்து நடவடிக்கைகளும் அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டதிற்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுகின்றது. அரசியல் யாப்பின்படி செயற்படாத ஜனநாயகம் தனது தனித்துவத்தினை இழப்பதோடு சர்வதேச சமூகங்களில் இருந்து புறந்தள்ளப்படுகின்றது.

09. சுதந்திரமான நீதித்துறை

ஜனநாயக ஆட்சியில் நீதித்துறைக்கு பாரிய பங்கு உள்ளது. அரசியல் யாப்பிலும் மற்ற சட்டங்களிலும் உத்தரவாதப்பட்டிருக்கும் உரிமைகள், சுதந்திரங்கள் சரிவர நிறைவேற்றப்படுகின்றதா என்பதை உறுதி செய்வதோடு அரசாங்கத்தின் செயற்பாடுகள் அரசியல் அமைப்பிற்கு அமைய இயங்குகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு நீதித்துறையானது எதுவித கட்டுப்பாடுகளுமின்றி செயற்படுகின்றது. அதற்கு நீதிபதிகள் அவர்களது கடமைகள், அதிகாரங்கள் என்பன அரசியல் திட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரடி ஜனநாயக முறை
(Direct Democracy)

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால் ஜனநாயக ஆட்சியில் மக்களின் நம்பிக்கை குறைந்து வருகின்றது. ஜனநாயகம் அரசியல் கட்சியின் அடிப்படையில் செயற்படுகின்றது. அரசியல் கட்சி மக்களின் நலனை விடுத்து கட்சிக் கொள்கைக்கு முதன்மை வழங்குகின்றது. இவர்கள் பொதுமக்களின் கருத்தை பிரதிபலிப்பதில்லை. இது ஜனநாயகத்திலிருந்து அகற்றப்படவேண்டும்.

தற்காலத்தில் சட்டமன்றப் பணி பல்கிப்பெருகி உள்ளது அத்தோடு சட்டத்துறை பொதுநலனுக்கு எதிராக பல சட்டங்களையும் இயற்றுகின்றது. இவற்றிலிருந்து மக்கள் நலனைப் பாதுகாக்கவென நவீன அரசுகள் மக்களின் அரசியல் பங்குபற்றும் திறன் அதிகரிக்கும் நோக்கில் பின்வரும் மூன்று முறைகளை கொண்டுள்ளன.

1. ஒப்பங்கோரல் / மக்கள் தீர்ப்பு (REFERENDUM)
2. தொடக்க உரிமை / குடி முனைப்பு/ குடிஒப்பம் ( INITI ATIVE)
3. திருப்பி அழைத்தல் / மீளழைத்தல் / பிறக்களைப்பு (RECALL)

## ஒப்பங்கோரல் (REFERENDUM)

ஒப்பங்கோரல் என்பது சட்டம் அல்லது அரசாங்கம் தான் மேற்கொள்ளும் அரசியல் திட்டத்திருத்தம், கொள்கை என்பவை தொடர்பாக மக்களின் அபிப்பிராயத்தினை பெற்றுக் கொள்ளும் ஓர் முறையாகும். இங்கு வாக்காளர் மத்தியில் “ ஆம், இல்லை” என்கின்ற இரு தெரிவுகள் மட்டுமே விடப்பட்டுள்ளது. வாக்காளரின் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளப்படின் அது நிறைவேற்றப்படும். இதனை நாம் 1978 ம் ஆண்டு இலங்கை நாட்டின் அரசியல் யாப்பில் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பங்கோரலின் நன்மைகள்

1. மக்களின் அபிப்பிராயத்தினை அறிதல்

ஒப்பங்கோரல் மூலம் மக்களின் உண்மையான கருத்தினை அறிய முடியும் பிரதிநிதிகளின் கருத்துக்கும் மக்களின் கருத்துக்கும் இடையில் மாறுபாடுகள் காணப்படலாம் எனவே மக்களிடம் உள்ள அபிப்பிராயத்தினை அறிய ஒப்பங்கோரல் வழிவகுக்கின்றது.

2. மக்களின் அரசியல் அறிவு பெருகுதல்.

குறிக்கப்பட்ட ஒரு சட்டம் அல்லது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் மக்களின் அபிப்பிராயத்திற்கு விடப்படும் போது அது தொடர்பான சாதக பாதக விளைவுகள் பற்றி கருத்து மக்களிடம் ஏற்படுகின்றது. இதனால் அவர்களின் அரசியல் அறிவு மேம்படுகின்றது.

3. மக்களின் இறைமை பாதுகாக்கப்படல்

பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திடம் நவீன ஜனநாயகத்தின் இறைமை அதிகாரம் உண்டு. எனினும் அது மக்களிடமே உறைந்து காணப்படுகின்றது இதனை ஒப்பங்கோரல் உறுதிப்படுத்துகின்றது.

## ஒப்பங்கோரலின் தீமைகள்

1. தேர்தல் ஆர்வம் குறைதல்

இம்முறையின் மூலம் அடிக்கடி தேர்தல் இடம்பெறுவதனால் வாக்காளர் தேர்தலில் விரக்தியடைவதனால் அவர்கள் தேர்தலில் சலிப்படைந்து அரசியல் ஆர்வம் குன்றுகின்றது.

2. காலதாமதம்

ஒப்பங்கோரல் பெருமளவு காலத்தை எடுக்கின்றது. இதனால் நாட்டுக்கு அவசரம் என மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தடைப்படுகின்றன. எதிர்பார்க்கும் பலனையும் அடைய முடியாதுள்ளது.

3. பாராளுமன்ற இறைமை பாதிப்படைதல்

இம்முறை மூலம் மக்கள் சட்டமன்றத்தின் சட்டம் இயற்றும் பணியில் ஈடுபடுவதனால் சட்டமன்ற பிரதிநிதிகளின் ஆர்வத்தைக் குறைப்பதோடு பொறுப்புணர்வையும் குறைக்கின்றது. இது பாராளுமன்ற இறைமையினை கேள்விக்கிடமாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடக்க உரிமை ( INITIATIVE)

தொடக்க உரிமை என்பது புதிய சட்டங்களை ஆரம்பித்து வைக்கவும் அரசியல் யாப்புத் திருத்தத்தினை அறிமுகம் செய்யவும் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையே ஆகும். அதாவது குறித்த எண்ணிக்கையிலான மக்கள் புதிய சட்டமூலம் ஒன்றை அறிமுகம் செய்து அதனைச் சட்டமாக்கும்படி பாராளுமன்றத்தினை வேண்டி நிற்க முடியும். இத் தொடக்க உரிமை சுவிஸ்லாந்திலும், அமெரிக்காவின் சில மாநிலங்களிலும் நடைமுறையில் உள்ளது.

### தொடக்க உரிமையின் நன்மைகள்

1. சட்ட மன்றத்தின் வேலைப்பளு குறைதல்

தற்கால சட்ட மன்றத்தின் பணிகள் அதிகரித்துள்ளன எனவே எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றும் விதத்தில் சட்ட மன்றத்தினால் சட்டம் இயற்றாது போகலாம். இத்தொடக்க உரிமை மூலம் விடுபட்ட சட்டங்களை மக்கள் இயற்ற முடியும்.

2. சிறுபான்மை நலன் பாதுகாக்கப்படுதல்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையருக்கு சாதகமான சட்டங்களை இயற்றப்படுகின்றது இதனால் சிறுபான்மை நலன் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. எனவே சிறுபான்மையினர் தமது நலன் சார்ந்த சட்டங்களை தொடக்க உரிமை மூலம் இயற்ற முடியும்.

3. நாட்டுப்பற்று வளர்தல்.

இம்முறை மூலம் சட்டவாக்கத்தில் மக்கள் பங்கு பற்றுகின்றனர் இது அரசியல் விடயத்தில் தாங்கள் ஈடுபடுகின்றோம் என்கின்ற உணர்வையும் அரசின் சட்டம் தாம் இயற்றுகின்றோம் என்ற உணர்வும் தோன்றுகின்றது. மக்கள் தேசத்தின் மீது பற்றுணர்வு உள்ளவர்களாக ஆக்குகின்றது.

### தொடக்க உரிமையின் தீமைகள்

1. மக்கள் சட்டம் பற்றிய அறியாமை

சட்டம் இயற்றுதல் மிகவும் சிக்கலான விடயமாகும். இதற்கு பயிற்சி அனுபவம் தேர்ச்சி என்பன அவசியமாகும் இது சாதாரண மக்களிடம் எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும். எனவே சிறந்த சட்டங்களை தொடக்க உரிமை மூலம் உருவாக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பழமை விரும்பும் மக்கள்

மக்கள் பிற்போக்கானவர்களாகவும் பழமை விரும்பிகளாகவும் காணப்படும் போது அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் சட்டங்கள் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக அமையும்.

3. பிணக்குகள் தோன்றுதல்

சிறுபான்மை, பெரும்பான்மையிடையே இதன் மூலம் பிணக்குகள் தோன்றுகின்றன. சிறுபான்மை தமது நலனுக்கு என ஒரு சட்டமூலத்தினை தொடக்கி வைக்க அதனை எதிர்ப்பவர்களாக பெரும்பான்மையினர் காணப்படுவர். இதனை சில நாடுகளில் அரசியல் கட்சிகள் சில தமக்கு சாதகமாக பயன்படுத்தக் கூடும்.

## திருப்பி அழைத்தல் (RECALL)

மக்கள் தாம் தெரிவு செய்த பிரதிநிதிகள் அல்லது உத்தியோகத்தர்கள் தம் கடமையை சரிவர புரியவில்லை என கருதும் பட்சத்தில் அவர்களை திருப்பி அழைத்துக் கொள்ள மக்கள் பெற்றுள்ள வாய்ப்பே திருப்பி அழைத்தல் எனப்படும் இம்முறை மூலம் பிரதிநிதி ஒருவரை நீக்க வேண்டும் எனில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் மனு செய்து அது மீண்டும் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு அது பெரும்பான்மை ஆதரவு எதிராகக் காணப்படின் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார். இது அமெரிக்காவின் சில மாநிலங்களில் பயன்படுத்தப்படுகின்றது. சுவிஸ்லாந்தில் 50 000 பேர் பிரதிநிதி ஒருவருக்கெதிராக மனு சமர்ப்பிக்கும்போது அவர் பதவியில் இருந்து அகற்றப்படுவார்.

### திருப்பி அழைத்தலின் நன்மைகள்

1. கடமையை திறம்பட செய்ய உதவுதல்

மக்கள் தங்களை திருப்பி அழைப்பார்கள் எனக் கருதி அவர்களை பதவியிலிருந்து அகற்றி விடுவார்கள் என்பதனால் பிரதிநிதிகள் அல்லது அலுவலர்கள் தமது கடமைகளை சரிவர செய்வர்.

2. மக்கள் இறைமையின் வெளிப்பாடு

மக்கள் தாம்தெரிவு செய்தபிரதி அல்லது உத்தியோகத்தர்களை தாம் நீக்குவதற்கு உரிமை பெற்றுள்ளமை மக்களின் இறைமையினை வெளிப்படுத்து-கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அலுவலர்களிடையே ஊழல் குறைதல்

அரச பதவியில் உள்ளவர்கள் தமது திறமையின்றி சிபார்சு லஞ்சத்தினை வழங்குவதனூடாக பதவி வகிக்கின்றனர். இதனால் மக்களின் செயற்பாடுகளின்மீது அவர்கள் அக்கறை கொள்வதில்லை. மக்கள் செயற்றிறன் அற்றவர்களை பதவியில் இருந்து அகற்றுவதனால் இவ் ஊழல் மீண்டும் நடைபெறுவது தடுக்கப்படுகின்றது.

**திருப்பி அழைத்தலின் தீமைகள்**

1. தனிப்பட்ட பழிவாங்கல்கள்

மக்கள் தமது விருப்பு வெறுப்புக்காரணமாக திறமை அனுபவம் ஆற்றல் உள்ள பிரதிகளை பதவியிலிருந்து நீக்கும் போது திறமையானவர்கள் அரசாங்க பதவிக்கு வருவதற்கு பின்னடிக்கின்றனர்.

2. நாட்டின் பொதுநலன் பாதிப்படைதல்

மீட்புரிமைகளை காட்டி மக்கள் பிரதிநிதிகளை மிரட்டுவதனால் பிரதிநிதிகள் அவர்களின் மிரட்டல்களிற்கு இசைந்து வீடுகின்றனர் இது பொது நலனுக்கு தம்மை அர்ப்பணித்தவர்களின் செயற்பாட்டை பாதிக்கின்றது இதனால் நாட்டின் தேசிய நலன் நிர்வாகம் பெரிதும் பாதிக்கின்றது.

3. பிரதிநிதிகளின் சுதந்திரம் கட்டுப்படுத்தல்

திருப்பியழைத்தலுக்கு அஞ்சிய பிரதிநிதிகள் அல்லது அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியினை நேர்மையாகவும் துணிவுடனும் மேற்கொள்ள முடியாதுள்ளது மக்கள் தம்மை திருப்பி அழைத்து விடுவார்களோ என அஞ்சி அவர்கள் தேசிய நலனை கருத்தல் கொள்ளாது போவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமை
## (Sovereighity)

ஈடற்ற அதிகாரம் அல்லது உயர்ந்த அதிகாரம் என இறைமை பொருள்படும். இறைமை அரசின் மூலக்கூறுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது அத்தோடு சமூகத்தில் காணப்படுகின்ற சங்கங்களில் இருந்து அரசினை இவ் இறைமையை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இறைமை எணணக்கருவாக காணப்படுவதால் அதை இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாது எனவே இதனை விளங்கிக் கொள்ள அரசியல் அறிஞர்களின் கருத்துக்கள் ஏற்புடையதாக அமையும். அந்த வகையில்

### யோன் ஒஸ்ரின் (John Austin)

"அது மக்கள் மீதும் குடிகள் மீதும் செலுத்துகின்ற முறையாகும். ஆனால் அது எதுவித சட்டங்களிற்கும் கட்டுப்படாத ஒரு வித சக்தியாகும்."

### யூட்ரோ வில்சன் (Woduro Wilson)

"ஓர்அரசுசட்டத்தினைஉருவாக்கவும்அதனைநடைமுறைப்படுத்தவும் கொண்டிருக்கும் அதிகாரமே ஆகும்."

### குரோசியஸ் (Grotius)

"சட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் மீது அரசு செலுத்தக் கூடிய முழுமையான அதிகாரமே இறைமையாகும்."

எனவே பொதுவாகநோக்கின் "வெளிநாடுகளால் கட்டுப்படுத்த முடியாததும் உள்நாட்டில் உயர்வானதும், வரையறுக்கப்பட்ட நிலம் ஒன்றில் வாழுகின்ற குடிகள், சங்கங்கள் மீது தனது விருப்பத்தினை திணிப்பதற்கு அரசு பெற்றுள்ள அதிகாரமே ஆகும்.

மேலே இறைமை பற்றி அறிந்தோம். அதனை தொடர்ந்து இனி அதன் வகைப்பாடுகள் பற்றி நோக்குவோம் அந்த வகையில் இறைமையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமை

தேசிய இறைமை (National Sovereighity) — சர்வதேச இற்றமை (International Sovereighity)

சட்ட இறைமை (Legal Sovereighity) — அரசியல் இறைமை (Political Sovereighity)

பெயரளவு இறைமை (Titolar Sovereighity) — உண்மை இறைமை (Actual Sovereighity)

**தேசிய இறைமை அல்லது அக இறைமை**

ஓர் அரசு தன் எல்லைக்குள் தனி நபர்கள் முதற்கொண்டு குழுக்கள் மீது தனது அதிகாரத்தினை செலுத்துவதனை தேசிய இறைமையாகும். இவ்இறைமை தனி நபர்களிற்கு சொந்தமானதற்கு மாறாக அரசிற்கே உரித்துடையது இத் தேசிய இறைமையே மக்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்வதற்கு அடிப்படையாக அமைகின்றது.

**சர்வதேச இறைமை அல்லது புற இறைமை**

ஒரு நாடு மற்ற நாடுகளில் கட்டுப்பட்டதல்ல அவ்வாறே ஒரு நாட்டின் சட்ட திட்டம் மற்றொரு நாட்டினை கட்டுப்படுத்தாது. ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் ஏனைய அரசுகள் தலையிடுவதில் இருந்து சுதந்திரமாகவும் கௌரவத்துடன் வாழ்வதற்கு பெற்றுள்ள அதிகாரமே சர்வதேச இறைமை எனப்படும்.

**சட்ட இறைமை அல்லது பாராளுமன்ற இறைமை**

சட்ட இறைமை என்பது இறைமையினை சட்ட ரீதியாக பயன்படுத்தி மக்களை கீழ்ப்படிய செய்வதாகும். அரசின் இறைமை இச் சட்ட இறைமையைக் கொண்டே விளங்க முடியும். இதனால் இவ் இறைமை முதன்மைப்படுத்தப்படுகின்றது இவ் இறைமை நாட்டின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றத்திடம் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல் இறைமை அல்லது மக்கள் இறைமை

பாராளுமன்றத்திடம் சட்டம் இயற்றும் இறைமை காணப்படும் போது அவ்அதிகாரத்தினை ஜனநாயக நாடுகளில் வாக்காளர் தமது வாக்குரிமையினை பயன்படுத்திக் கட்டுப்படுத்தினர். எனவே அரசியல் இறைமை என்பது ஜனநாயக நாடுகளில் வாக்குரிமை-யினையே குறிக்கின்றது. இது மக்களிடம் காணப்படுகின்றது. அரசின்செயற்பாடுகளை அரசியல் இறைமையே வரம்பு கட்டும் ஆற்றல் பெற்றுள்ளது.

### பெயரளவு இறைமை

மக்களாட்சியின் தோற்றத்தினை தொடர்ந்து மன்னன் பெயரளவுஇறைமையாளனாக்கப்பட்டான்.அதாவது உண்மையான குழு அல்லது ஒருவரிடம் இறைமை காணப்படும்போது வேறொரு-வரிடம் இறைமை காணப்படின் அது பெயரளவு இறைமை எனப்படும். இவ்வகையான இறைமையினை நாம் பிரித்தானிய முடியின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும் அதாவது அவருக்க அரசியல் திட்ட அதிகாரத்தினை வழங்கிய போதும் நடைமுறையில் அதிகாரம் செலுத்துவதில்லை.

### உண்மை இறைமை

மக்களாட்சியில் முதன்மையானதொன்றாக இது காணப்படு-கின்றது. அதாவது ஒரு குழு அல்லது தனி நபர்களால் இவ் இறைமை பிரயோகிக்கப்படக் கூடும் எனப்படும். பிரித்தானியாவில் இவ் உண்மை இறைமையானது பாராளுமன்றத்திடமும் அமைச்சரவையிடமும் காணப்படும்.

## இறைமையின் பண்பு

1. **வரம்பற்றது (Avsolutenes)**

இறைமையின் பிரதான பண்பு இதுவாகும். அது அரசு அதன் எல்லைக்குள் வரம்பற்ற அதிகாரத்தினைக் கொண்டிருப்பதே ஆகும். எல்லைக்குள் அரசுக்கான இறைமை வரம்பற்றதாக இருக்கும்போது வெளிநாடுகளின் ஆக்கிரமிப்பு உள்நாட்டில் மோதல்கள் என்பவற்றில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும், இவ் எண்ணமே அரசின் இறைமையின் அர்த்தத்தினை புலப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. நிரந்தரமானது (Permanent )**

அரசின் இறைமை எப்போதும் நிரந்தரமாகக் காணப்படும் அரசாங்கம் மாறும்போது அவற்றுக்கிடையில் இறைமை மாறுவதாக சில அறிஞர்கள் கூறுவர். இது தவறாகும். எவ்வாறு அரசாங்கம் மாறினும் இறைமை இருப்பிடம் அரசின் நிரந்தரமாகவே காணப்படும்.

**2. பிரிக்கமுடியாதது (indivisivility)**

இறைமை ஒரு அரசிடம் மட்டும் குவிந்து காணப்படும் இறைமை பிரிப்பது என்பது அதனை அழிப்பதென்பதற்கு சமனாகும்.சமஷ்டியின் அடிப்படையாக அதிகாரப் பரவலாக்கம் காணப்படும் இது இறைமையினை பிரிக்கும் ஒரு செயன்முறையென அறிஞர்கள் கருதுகின்றனர். அது தவறாகும் ஏனெனில் ஓர் அரசு எல்லைக்குள்ளேயே அதிகாரம் பரவலாக்கப்படுகின்றது. இதனை இறைமையின் பிரிப்பு எனக் கருத முடியாது.

## இறைமை பற்றிய ஜீன்போடினின் கருத்துக்கள்

இறைமை பற்றிய கோட்பாடுகளில் ஆரம்பக் கோட்பாட்டாளராக நாம் ஜீன்போடினைக் காணலாம். இவர் தனது "குடியரசு" எனும் நூலினூடாக இறைமை பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளார்.

மக்கள் மீதும் குடிகள் மீதும் செலுத்தப்படுகின்ற எவ்வகையான கட்டுப்பாடுகளுக்கும் உட்படாத சட்டமே (மிக உயர்ந்த அதிகாரமே) இறைமையாகும் என்கிறார். இறைமையின் உறைவிடமாக இவர் தனி மனிதனையே காண்கிறார். அதிகாரம் உடையவரின் கீழ் செயற்படும் அமைப்பானது சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. இவ் அமைப்பு மேற்கொள்ளுகின்ற சட்டமே இறைமை ஆகும். சமுதாய நீதி, இயற்கைச் சட்டம் காணப்படுகின்றது என்கிறார். ஆனால் தெய்வீக நீதிக்கு அரசு கட்டுப்பட வேண்டும் என்கிறார். குறிப்பாக பிரான்சினுடைய "சாவிச்சட்டம்" என்பவற்றிற்கு இறைமையாளன் அடிபணிந்தே ஆக வேண்டும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கருத்துக்களுடன் இவருடைய முந்தைய கருத்துக்கள் சிந்தனை ரீதியாக முரண்பட்டு அமைவதைக் காணலாம். பிரான்சில் சிவிலீ யுத்தம் நடந்த காலப்பகுதியில் இவர் வாழ்ந்தமையால் இக் காலப்பகுதியில் நிலவிய சூழ்நிலைகட்கு அமையவே இவரது கருத்துக்களும் அமைகின்றன. தனி மனித முடியாட்சி பற்றி சிந்தித்ததிலிருந்து போடின் அக்கால கட்டத்தில் செல்வாக்கு செலுத்தி வந்த கிறிஸ்தவ மதத்தையும் பாப்பரசரின் செல்வாக்கையும் கருத்திற் கொண்டே தெய்வீக நீதிக்கு இறைமை பற்றி உலகுக்கு முதன் முதல் கூறிய சிந்தனையாளராகக் காணப்படுகின்றார்.

## இறைமை பற்றிய ஜோன் ஒஸ்ரினின் கருத்துக்கள்

"சட்டவியலுக்கான விளக்கவுரை" எனும் நூலினூடாக ஜோன் ஒஸ்ரின் தனது கருத்துக்களை முன் வைக்கின்றார். நிர்ணயம் செய்யப்பட்ட அல்லது தோந்தெடுக்கப்பட்ட தனி மனிதன் ஏனையவர்களின் கட்டளைகட்கு கீழ்ப்படியாமலும் அவனுடைய கட்டளைகட்கு ஏனையோர் கீழ்ப்படிதலுமே இறைமை என்கிறார். அவனே அச்சமூகத்தின் இறைமையாளன் எனவும் அவனைச் சுற்றியிருக்கின்ற அச்சமூகமே சுதந்திரம் பெற்ற அரசியல் சமூகம் எனவும் குறிப்பிடுகின்றார்.

ஜோன் ஒஸ்ரினின் இறைமைக் கோட்பாட்டின்படி வரம்பில்லாதது. பிரிக்கப்பட முடியாதது. எல்லையற்றது போன்ற கருத்துக்களை முன்வைக்கிறார். தனிமனிதன் ஒருவனிடமே அதிகாரத்தை ஒப்படைத்து அவனே இறைமையின் உறைவிடம் எனவும் அவனிடமிருந்து அதிகாரங்களைப் பிரிக்க முடியாது எனவும் குறிப்பிடுகின்றார். இறைமை என்பது எல்லையற்றது. வரம்பில்லாதது என்பதனூடாக எந்த ஒரு சமுதாய சட்டங்களுக்கோ, தெய்வீக நீதிக்கோ இறைமை கட்டுப்படமாட்டாது என்று தெளிவுபடுத்துகின்றார். அதாவது சட்ட ரீதியான அரசியல் இறைமையை முடியாட்சிக்கு ஆதரவாக விளக்குகின்றதே இவரின் கோட்பாடாகும். ஆனால் நடைமுறையின் ஜனநாயக அரசுகளில் இவ்விறைமைக் கோட்பாட்டின் பிரயோகம் என்பது சாத்தியமில்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார வேறாக்கல்
## (Seperation of power)

ஆரம்ப காலத்தில் அரசாங்க அதிகாரங்கள் அனைத்தும் மன்னன் ஒருவனிடமே குவிந்து காணப்பட்டது. அவர்கள் தாமாகவே சட்டத்தை இயற்றி அதனை நடை முறைப்படுத்தி நீதி விளக்கம் கூறி வந்தவர்களாகவும் காணப்பட்டனர். இது சர்வாதிகாரத்தினை ஏற்படுத்துவதோடு மக்களின் சுதந்திரம், உரிமைகளை, பாதிக்கின்றது.

அரசாங்கத்தின் அதிகாரங்கள் சட்டவாக்கல் சட்டத்தினை நிர்ணயித்தல், சட்டத்திற்கு விளக்கம் அளித்தல் என தனித்தனியாக பிரிக்கப்படல் வேண்டும் பிரிக்கப்பட்ட அதிகாரம் வேறுபட்ட நிறுவனத்திடம் வழங்கப்படல் வேண்டும். சட்டம் இயற்றல் சட்டத்துறையிடம், சட்டத்தினை நடைமுறைப்படுத்தல், நிர்வாகத்-துறையிடமும் சட்டத்திற்கு விளக்கம் அளித்தல் நீதித்துறையிடமும் கொடுக்கப்படல் வேண்டும் மூன்று அரசதுறையிடமும் அங்கம் வகிப்பவர்கள், தொடர்பாக, ஒருதுறை இன்னொரு துறையினை கட்டுப்படுத்துவதும், சம்பந்தமாகவும் ஒன்றின் தொழிலை மற்றைய துறை புரிவது சம்பந்தமாகவும் எதுவித தொடர்புகளுமின்றி வெவ்வேறக இயங்க வேண்டும் என்ற கருத்தை வலுவேறாக்கம் குறிக்கின்றது.

மேலும் இவ் வலுவேறாக்கல் கோட்பாட்டினை விளங்கிக் கொள்வதற்கு, பல்வேறு அறிஞர்களுடைய கருத்துக்கள் ஏற்புடையனவாக அமையும்.

**1690 ஜோன் லொக் (John Lock)**

"கொள்கையிலும் நடைமுறையிலும் சட்டம் இயற்றலும் நிர்வாகமும் பிரிக்கப்படல் வேண்டும்."

**1765 பிளக் ஸ்ரோன் (Black Stone)**

" சட்ட நிர்வாக அதிகாரம் ஒரு வருடம் அல்லது ஒரு குழுவிடம் இருந்தால், பொது மக்களின் சுதந்திரம் இருக்காது"

**1758 அலெக்சாண்டர் கெமின்ரன் (Alexander Kemington)**

"எவரோஒருசிலரோ,பலரோ,அதிகாரத்தினைவைத்திருந்தால், அது சர்வாதிகாரத்திற்கான இலக்கணமாக இருக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொன்டஸ்கியூவின் வலுவேறாக்கல் கோட்பாடு

வலு வேறாக்கலை கோட்பாடு ரீதியாக முதன் முறையாக முன்வைத்தவர் ஆகக் காணப்படுதல். இவர் தனது கருத்துக்களை (1748– Spritof the Low) என்னும் நூலினூடாக முன்வைத்துள்ளார்.

பிரான்சிய புரட்சி இடம் பெற்ற காலப்பகுதியில் வாழ்ந்த மொன்ட்ஸ்கியூ 13ம் லூயி மன்னனுடைய சர்வாதிகார முடியாட்சி கொடுமைகளை கண்டறிந்தார். இங்கிலாந்து நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு கண்ட அரசியல் நிலைமையினை பிரான்சு நாட்டில் நிலவிய அரசியல் நிலைமையுடன் ஒப்பிட்டார் பிரித்தானிய மக்கள் சுதந்திரமாகவும், உரிமையுடனும் காணப்படுவதற்கு காரணம் இங்கிலாந்துப் பாராளுமன்றம் பலம் மிக்கதாகவும் நீதிபதிகள் சுதந்திரமாக செயற்படுவதுமே காரணம் என கண்டறிந்தார். பிரான்சில் இல்லாத சுதந்திரம், உரிமை பிரித்தானியர் காணப்படுவதற்கு காரணம் அரசாங்க அதிகாரம், பிரிக்கப்பட்டுக் காணப்படுவதும், அரசாங்க நிறுவனம் தலையீடின்றி செயற்படுவதுமே ஆகும் எனக் கண்டு கொண்டார்.

அரசாங்கத்தின் பணிகள், அதிகாரங்கள் வேறுபடுத்திப் பிரிக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரிக்கப்பட்ட அதிகாரங்கள் தனித்தனி நிறுவனங்களிடம் அளிக்கப்படல் வேண்டும் அந்த நிறுவனங்கள், தனது பணிகளை சுதந்திரமாக ஆற்ற வேண்டும் என தனது கோட்பாட்டை முன் வைக்கின்றார். எனினும் அரச துறைகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் தொடர்பினை கொண்டிருத்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றார். முழுமையான வலுவேறாக்கல் என்பது அரச இயந்திரத்தின் செயற்பாட்டிற்கு தடையாக அமையும் என்பது இவரது வாதமாகும்.

நாம் தற்காலத்தில் வலுவேறாக்கல் கோட்பாட்டினை அறிந்து கொள்வதற்கும் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் அரசாங்க துறைகளுக்கிடையில் பின்வரும் பண்புகள் இருக்க வேண்டும் என கூறிக் கொள்ளலாம்.

1.Composition - ஒரு துறையில் அங்கம் வகிப்பவர்கள் ஏனைய துறைகளில் அங்கம் வகிக்கக் கூடாது

உதாரணம் - சட்டத் துறையில் அங்கம் வகிப்பவர்கள் நிர்வாக துறையின் அமைச்சர்களாக இருக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Limitation – ஒரு துறையின் செயற்பாடுகளை இன்னொரு துறை கட்டுப்படுத்தவோ அல்லது தலையிடவோ கூடாது

உதாரணம் சட்டத்துறை உருவாக்கிய சட்டங்களை நீதிமன்றம் தவறு என தீர்ப்பளிக்க கூடாது

3. Function – ஒருதுறைக்குரிய பணிகளை இன்னொரு துறை செய்யக் கூடாது

உதாரணம் - சட்டத்துறையின் மேலவை நீதி விசாரணைகளை மேற்கொள்ளக் கூடாது

## அமெரிக்காவின் அதிகார வேறாக்கல் கோட்பாட்டின் பிரயோகம்

அமெரிக்க அரசியல்திட்டம் அதிகாரவேறாக்கல் கோட்பாட்டிற்கு சிறந்த முன்னுதாரணம் ஆகும். ஜனாதிபதித்துவ அரசாங்க முறை காணப்படுவது வலுவேறாக்கல் கோட்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த காரணமாக அமைகின்றது.

சட்டத்துறையில் இரு மன்றங்கள் உள்ளன. செனற் பிரதிநிதிகளைக் அவையாகும். அமெரிக்க சட்டசபை காங்கிரஸ் என அழைக்கப்படும் இக் காங்கிரஸ் மீது நிர்வாகத்துறை ஆதிக்கம் செலுத்த முடியாது ஏனெனில் ஜனாதிபதியும் அமைச்சர்களும் காங்கிரசின் அங்கத்தவர்கள் அல்ல. அவ்வாறே நீதித்துறையும் காங்கிரஸ் மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை. இதனால் நிர்வாக நீதித்துறையின் தலையீடுகளின்றி காங்கிரஸ் தனது அதிகாரங்களிற்குட்பட்டு சுதந்திரமாக செயற்படுகின்றது.

நிர்வாகத்துறைக்குப் பொறுப்பாக ஜனாதிபதியும் அவரது அமைச்சரவையும் காணப்படுகின்றனர். இவர்கள் மீது காங்கிரஸ் ஆதிக்கம் செலுத்த முடியாது காரணம் அவர்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் அல்ல. அத்தோடு ஜனாதிபதியும் அமைச்சர்களும் காங்கிரசிற்கு பொறுப்பானவர்களும் அல்ல அமெரிக்காவின் நீதித்துறை, ஜனாதிபதி அமைச்சர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. நீதித்துறை தலையீடுகளின்றி நிர்வாகத்துறை பணியாற்றுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறை பொறுப்பாக உயர்நீதிமன்றமும், ஏனைய நீதமன்றங்களும் காணப்படுகின்றது. இந்நீதித்துறை சட்ட மன்றம் நிர்வாகத்துறை என்பவற்றின் தலையீடின்றி சுதந்திரமாகச் செயற்படுகின்றது. நீதிபதிகள் சட்ட சபையினால் நியமிக்கப்பட்ட-வர்களும் அல்லர். காங்கிரசிற்கு பொறுப்பானவர்களும் அல்லர். இவ்வாறு இருப்பதனால் நிர்வாகத்துறை, சட்டத்துறை தலையீடுகளும் இன்றி நீதித்துறை தனது அதிகார வரம்புக்குள் சுதந்திரமாக இயங்குகின்றது. இவ்வாறு அமெரிக்க அரசாங்கத்திற்கிடையில் அதிகார வேறாக்கல் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் சில சந்தாப்பங்களில் அவை கேள்விக்கிடமாகவே காணப்படும்

## சமநிலைகளும் தடைகளும் (Check and Balance)

அதிகார வேறாக்கல் கோட்பாட்டுடன் இணைந்த ஒரு கோட்பாடாகவே இது விளங்குகின்றது. மொன்டஸ்கியூவினுடைய அதிகார வேறாக்கல் கோட்பாட்டினை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படின் அது அரசாங்க துறைகளுக்கிடையில் சம நிலைகளிலும் பார்க்க சமனற்ற தன்மையையே உருவாக்கும். இது அரச இயந்திரத்தினை செயற்றிறன் அற்றதாக்கும். இதனை கருத்தில் கொண்டே அமெரிக்க அரசியல் திட்டத்தினை வரைந்தவர்கள் வலுவேறாக்கலுடன் இணைந்து சமநிலைகளும் தடைகளும் கோட்பாட்டினை அறிமுகம் செய்தனர்

ஒவ்வொரு துறைகளும் தனது எல்லைக்குள் பணியாற்ற வேண்டும் ஒரு துறை தனது அதிகாரத்தினை எல்லை மீறும் போது மற்ற இரு துறைகளும் அதனைத் தடுக்கும் மற்ற நிறுவனங்களின் அதிகாரம் எல்லையை தாண்டும்போது இத்துறைகளின் அதிகாரத்தினை ஏனைய துறை தடுக்கும். இவ்வாறு அதிகாரம் அதிகாரத்தினை தடுப்பதனால் மூன்று துறைகளும் சமநிலையில் காணப்படுகின்றது. சமநிலை குழம்பும்போது ஏனைய துறைகள் தலையிட்டு சமநிலைப்படுத்தும்.

சட்டத்துறை மீது நிர்வாக நீதித்துறை என்பன தலையிடுகின்றன. ஜனாதிபதி சில சட்டங்களை இயற்றுமாறு காங்கிரசுக்கு பரிந்துரை செய்ய முடியும். காங்கிரஸ் இயற்றும் சில சட்டங்களை ஜனாதிபதி ரத் அதிகாரம் (Veto Power) ஒத்தி வைக்க முடியும் இவ்வகையில் சட்டத்துறையின் மீத நிர்வாகத்துறை தலையிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் இயற்றும் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணானது எனக்கூறி நீதிமன்றம் அச்சட்டத்தினை நிர்வாகத்துறை நிறைவேற்றாது தடுக்க முடியும். மேலும் சட்டத்துறையின் மூலம் சட்டம் இயற்றப்படினும் தான் விருப்பம்போல் அச்சட்டத்திற்கு தாம் விரும்பியாற் போல் விளக்கத்தினைக் கொடுக்க முடியும்.

நிர்வாகத்துறையின் மீது சட்டம், நீதித்துறை என்பன பல தடைகளைக் கொண்டுள்ளது. ஜனாதிபதியின் நிர்வாக நடவடிக்கைகளை சட்டத்துறை ஏற்க வேண்டும். அவற்றுள் போர்ப் பிரகடனம் உயர் பதவிகளுக்கான நியமனம் வெளிநாட்டு ஒப்பந்தங்கள் என்பவற்றை செனற் ஏற்றல் வேண்டும். அவ்வாறு செனற் ஏற்காது மறுக்க முடியும். ஜனாதிபதி மீது தேச துரோக குற்றச்சாட்டும் உரிமை பிரதிநிதிகள் சபைக்கு உண்டு அதனை விசாரிக்கும் அதிகாரம் செனற்றினைச் சாரும். நிர்வாகத்துறை மீது நீதித்துறை, சட்டத்துறை என்பன தலையீடுகளைக் கொண்டுள்ளது. ஜனாதிபதியின் நிர்வாக செயற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானதெனக் கூறி அவற்றை செயற்படுத்துவதைத் தவிர்க்க முடியும்

நீதித்துறை மீது சட்ட நிர்வாகத்துறை குறுக்கீடுகளைக் கொண்டுள்ளது. நீதிபதிகளை சட்டமன்றம் தேசதுரோக வழக்குகள் மீது விசாரணைக்குட்படுத்த முடியும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அத்தோடு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தண்டனைகளை குறைக்க நீக்க, மாற்ற முடியும் இதனையே சமநிலைகளும் தடைகளும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அதிகார வேறாக்கல் கோட்பாட்டின் பிரயோகம்

மொன்டஸ்கியூ இங்கிலாந்து அரசியலமைப்பினை உதாரணம் காட்டியே அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை விளக்கினார். இங்கிலாந்தில் அதிகாரப்பிரிவினை காணப்படுவதனாலேயே அங்கு மக்கள் உரிமையுடனும் சுதந்திரத்துடனும் காணப்படுகின்றனர் எனக் கூறினார். ஆனால் அதிகார வேறாக்கல் காணப்படாத ஒரு நாடாக பிரித்தானியா காணப்படுகின்றது.

இங்கிலாந்து நிர்வாகத்துறை பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அதாவது நிர்வாகத்துறையான பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் சட்டசபையில் இருந்தே தெரியப்படுகின்றனர். நாட்டின் நீதித்துறையினை நிர்வாகத்துறையே தீர்மானிக்கின்றது. அத்தோடு நாட்டின் தலைமை நீதிமன்றமாக சட்டமன்றத்தின் மேலவையான பிரபுக்கள் சபையிடம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே சட்டத்துறையானது நிர்வாக நீதித்துறைகள் மீது செல்வாக்குப் பெற்றுள்ளமை காணக்கூடியதாக உள்ளது

எனவே சட்ட நிர்வாக நீதித்துறைகளுக்கிடையே அதிகார வேறாக்கல் இருப்பதனை விட அதிகார ஒன்றிப்பே காண்படுகின்றது. ஆனால் சட்டம் இயற்றல் நிர்வகித்தல், அனைத்தையும், அமைச்சரவை மேற்கொள்ளுகின்ற போது ஒருதுறை அதிகாரத்தினை பிரயோகிக்கும் போது ஏனைய இரு துறைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த கால வினாக்கள்

(1998)

1. ஜனநாயகத்தோடு சமத்துவத்திற்குள்ள விசேட பொருத்தப்பாடு என்ன.

(1999)

1. அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை விபரிக்க
2. அதன் முக்கியத்துவம் என்ன
3. ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் அதிகாரப் பிரிவினை ஏதாவது உண்டா

(2000)

1. இங்கிலாந்தின் அதிகாரப்பிரிவினை நடைமுறையில் இல்லை. (சிறுகுறிப்பு)
2. ஐக்கிய அமெரிக்காவில் அரசாங்க ஸ்தாபனங்களுக்கிடையில் தடைகள் சமன்பாடுகள் முறை நிலவுவது இல்லை( சிறுகுறிப்பு)

(2001)

1. ஜனநாயகம் என்ற சொல்லினை வரைவிலக்கணப்படுத்துக.
2. ஜனநாயகத்தின் பிரதான பண்புகள் யாவை?
3. ஜனநாயகம் பாசிசத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.
4. தொடக்கி வைத்தல் அல்லது திருப்பியழைத்தல் (சிறுகுறிப்பு)

(2002)

1. இறைமை பற்றிய ஒஸ்ரீனின் கருத்து (சிறுகுறிப்பு)
2. ஒப்பங்கோரல் (சிறுகுறிப்பு)

(2003)

1. சமத்துவம் என்ற எண்ணகருவைக் குறிப்பிட்டு ஜனநாயகத்துடன் சமத்துவம தவிர்க்க முடியாது என கருதப்படுவதற்கான காரணத்தைப் பரிசீலிக்க.
2. இறைமை பற்றிய எண்ணக்கரு காலத்தால் பழமையாகி விட்டது. (சிறுகுறிப்பு)
3. நேரடி ஜனநாயக முறை மக்கள் இறைமையினை முக்கியத்துவப்படுத்துகின்றது. (சிறுகுறிப்பு)

(2004)

1. ஜனநாயகம் என்ற பதத்தினை வரைவிலக்கணம் செய்து அதன் பிரதான பண்பினைக் குறிப்பிடுக.

(2005)

1. நேரடி ஜனநாயக முறைகள் (சிறுகுறிப்பு)
2. தடைகளும் சமன்பாடு கோட்பாடுகள் (சிறுகுறிப்பு)

(2006).

1. ஓர் சனநாயக அரசாங்கத்தின் பிரதான பண்புகள் யாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077965 48133 077 268 48133
48133 Correct

# உசாத்துணை நூல்கள்
# (Reference)


1. ஹரிப்பிரியா.கொ (1972.) அரசியல் அணைக்கள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம்.- சென்னை

2. அ.ஜோதிலிங்கம் (2007) அரசறிவியல் ஓர் அறிமுகம் குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை

3. பொதுசன கல்வி நிகழ்ச்சித்திட்டம் (1994) ஜனநாயகம் என்றால் என்ன மார்க்க நிறுவன வெளியீடு – கொழும்பு

4. கட்டுரைத் தொகுப்பு (1985) அரசியல் அமைப்புச் சட்டம் வெளிவாரி சட்ட மாணவர் மன்றம், மட்டக்களப்பு.

5. கட்டுரைத் தொகுப்பு. (1998) பொருளாதார அரசியல் பிரச்சனைகள், மார்க்க நிறுவன வெளியீடு – கொழும்பு

6. எஸ்.ஐ கீதபொன்கலன் (1992) அரசறிவியல் அடிப்படை – கொழும்பு.

7. அ.சிவராஜா (2006) அரசியல் மூல தத்துவம். குமரன் புத்தக இல்லம். - கொழும்பு – சென்னை

8. அ. அமரநாதன் (1995 ) அரசியல் கோட்பாடுகள், தீபா பதிப்பகம். - சென்னை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 777 684833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org